# பெப்ரவரி - 11- சனி

## தூய லூர்து அன்னை

**“அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவா2:5)**

---------------------------------------------------------------------

### முதல் வாசகம்: ஏசாயா 66: 10 – 14

எருசலேமின் மேல் அன்பு கொண்ட அனைவரும் அவளுடன் அகமகிழ்ந்து அவள் பொருட்டு அக்களியுங்கள் அவளுக்காகப் புலம்பி அழும் எல்லாரும் அவளுடன் சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடி ஆர்ப்பரியுங்கள். அப்போது அவளின் ஆறுதல் அளிக்கும் முலைகளில் குடித்து நீங்கள் நிறைவடைவீர்கள் அவள் செல்வப் பெருக்கில் நிறைவாக அருந்தி இன்பம் காண்பீர்கள். ஆண்டவர் கூறுவது இதுவே: ஆறுபோல் நிறைவாழ்வு பாய்ந்தோடச் செய்வேன் பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்து வரச் செய்வேன் நீங்கள் பால் பருகுவீர்கள் மார்பில் அணைத்துச் சுமக்கப்படுவீர்கள் மடியில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள். தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள். இதை நீங்கள் காண்பீர்கள், உங்கள் இதயம் மகிழ்ச்சி கொள்ளும், உங்கள் எலும்புகள் பசும்புல்போல் வளரும் ஆண்டவர் தம் ஆற்றலைத் தம் ஊழியருக்குக் காட்டுவார் என்பதும் அவரது சினம் அவர்தம் பகைவருக்கு எதிராய் மூளும் என்பதும் அறியப்படும்.

**பதில்பாடல்:** என் தலைவரே தலைமுறை தோறும் நீரே எங்கள் புகலிடம்

### நற்செய்தி: யோவான் 2: 1–11

அக்காலத்தில் கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, ”திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது” என்றார். இயேசு அவரிடம், ”அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம், ”அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார். யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும். இயேசு அவர்களிடம், ”இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்” என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். பின்பு அவர், ”இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள்” என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, ”எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர் யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?” என்று கேட்டார். இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** இன்று லூர்து அன்னை காட்சி கொடுத்ததை தியானிக்க திருச்சபை நம்மை அழைக்கிறது. தாய் மரியா பலவாறான பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுவதை நாம் பார்க்கலாம். அன்னைக்கு மட்டும்தான் பல நாமங்கள் உண்டு. சதாசகாயமாதா, ஆசீர்வாதத்தின் மாதா, லூர்துமாதா, வேளாங்கண்ணி மாதா, வியாகுல மாதா, அடைக்கல மாதா, மீட்பின் அன்னை என்று பல நாமங்களால் மக்கள் அவர்களை அன்புடன் அழைக்கிறார்கள். ஏன் என்றால் துன்ப வேளைகளில் கூப்பிடும்போது, துணை நிற்பவராக, யேசுவிடம் எமக்காக பரிந்து பேசுபவராக அன்னை திகழ்கிறார். இன்றைய நற்செய்தியில் கூட திருமண வீட்டார் கேட்காமலே அவர்களின் தேவையை புரிந்துகொண்டு, உதவ முன்வருகின்றார். யாரிடம் குறையை சொன்னால் அக்குறையை பூர்த்தி செய்யலாம் என்பதை நன்கு அறிந்தவர் தாய் மரியா. எமது வாழ்விலும் நாம் நமது தாய்க்குத்தான் முதலிடம் கொடுக்கின்றோம். அவர் மனம் வருந்துவதை நாம் விரும்புவதில்லை. அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு போன்ற பண்புகளினால் உயர்ந்து நிற்பது தாயன்பு மட்டுமே. எனவே அன்னைக்கு மரியாதை கொடுக்கும் நாம் அவர் வாழ்ந்து காட்டிய பாதையில் வாழ அழைக்கப்படுகின்றோம். இறை சித்தம் ஏற்று, துன்பத்தை சுமந்து இறைவன் பாதம் சரணடைந்ததுபோல், நாமும் சரணடைவோம்.